**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 119 **நாள்:** 26.02.2026

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் கீழ், டான்பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரியில் பயிலும் 75 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளை இன்று வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இன்று (26.02.2026) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், இராயபுரம் மண்டலம், பேசின் பிரிட்ஜ், டான்பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரியில் பயிலும் 75 மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.01.2026 அன்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக "உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட்டத்தில் 20 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகளை கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

அவ்வாறாக, தமிழகம் முழுவதும் உயர்கல்வி பயிலும் கலை, அறிவியல், வேளாண்மை மற்றும் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பக் கல்லூரி மாணவ, மாணவியருக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறையில் உள்ள வாய்ப்புகளை தெரிந்து கொண்டு பயன்படுத்துவதற்கு ஏதுவாக மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று, பேசின் பிரிட்ஜ், டான்பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயிலும் 75 மாணவ மாணவியருக்கு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராஜன், மண்டல அலுவலர் திரு.ஜி.சொக்கலிங்கம், உள்ளாட்சிப் பிரதிநிதி திரு.தமிழ் வேந்தன், டான்பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரி செயலாளர் Fr. செபாஸ்டியன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி,**